தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 11, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 ஆகஸ்ட் 27, வெள்ளிக்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று."

இனிமையான சொற்கள் இருக்கும்போது அவற்றை விடுத்துக் கடுமையாகப் பேசுவது கனிகளை ஒதுக்கி விட்டுக் காய்களைப் பறித்துத் தின்பதற்குச் சமமாகும்.

[*குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. தகவல் கோரல்

கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்டுவது குறித்து பத்திரிகைகளில் வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை பத்திரிகைகளில் எல்லாம் ஒரு செய்தி வந்திருக்கிறது. ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினோம். மேகதாது விஷயத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒன்றிய அரசை வலியுறுத்தி வருகிறார். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் புதுடெல்லி, சென்று*

[திரு. கு. செல்வபெருந்தகை] [2021 ஆகஸ்ட் 27

ஒன்றிய அரசின் மாண்புமிகு அமைச்சர் மற்றும் அதிகாரிகளை நம்முடைய அனைத்துக் கட்சிக் குழு சந்தித்து வந்தது. ஆனால், இன்று பத்திரிகைகளில் பரபரப்பாக ஒரு செய்தி வந்திருக்கிறது. இந்தச் செய்தி தமிழக மக்களை, குறிப்பாக, டெல்டா மக்களையும், வேளாண்மை பணியாற்றும் விவசாயிகளையும் மிகவும் பாதிப்படைய வைத்திருக்கிறது. மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி அவையிலே அறிவிப்பாரா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் மாண்புமிகு மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து, நம்முடைய அனைத்துக் கட்சிக் குழு மிக நியாயமான நமது கோரிக்கையை முன்வைத்தது. ஆனால், மத்திய அரசு தொடர்ந்து பாராமுகத்துடன் நம்மை அணுகுகிறது. அதாவது "பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுகின்ற" கதையாக, மத்திய பாரதிய ஜனதா அரசு நடந்துகொள்கிறது. அதனால், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு சரியான ஒரு தீர்வைக் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

***திரு. வி.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேகதாதுவில் அணை கட்டுகிற அந்தப் பணியை, யார் தடுத்தாலும், எவர் தடுத்தாலும் நாங்கள் கட்டியே முடிப்போம் என்று ** கர்நாடக முதலமைச்சர் பேசுகிற பேச்சு, இந்திய இறையாண்மைக்கு எதிரானது. ஆகவே, உடனடியாக தமிழகமே ஒன்று திரண்டு, ஒன்று கூடி, மேகதாதுவில் அணை கட்டுகிற கர்நாடக அரசினுடைய முயற்சியை தடுத்தே ஆக வேண்டும் என்று இந்த மன்றத்திலே நான் பதிவு செய்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2021 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும்.

திரு. வி.பி. நாகைமாலி: மேகதாதுவில் அணை கட்டினால், காவேரி டெல்டா பகுதி பாலைவனமாகிவிடும் என்ற அந்தக் கவலையோடும், உணர்வோடும் ஒன்று திரண்டு, மேகதாதுவில் அணை கட்டுகிற அந்தப் பணியை நாம் தடுத்தே ஆக வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேகதாது குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தி, அதற்குப் பிறகு டெல்லியில், நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலே அனைத்துக் கட்சிக் குழு மாண்புமிகு மத்திய நீர்வளத் துறை அமைச்சரை சந்தித்து, ஏறத்தாழ ஒரு மணி நேரத்திற்கு மேலாக, தமிழக மக்களுடைய நியாயங்களையெல்லாம், ஆதாரப்பூர்வமாக எடுத்துரைத்தது. 'நான் நடுநிலையாக நடப்பேன்' என்று மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் கூறினார். ஆனால், இப்போது வரக்கூடிய செய்திகள், ஒன்றிய அரசு நடுநிலையில் தவறுகிறதோ என்ற ஓர் அச்சத்தை ஏற்படுத்துகின்றன. எனவே, நமது தமிழக மக்களுடைய உரிமைகளைக் காப்பதற்கு இந்த அரசு அடுத்து என்ன செய்யப்போகின்றது என்பதை மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

முற்பகல் 10-05

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, சட்டமன்றத்தில் இடம்பெற்றிருக்கின்ற கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டி, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே, மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து, மத்திய அரசினுடைய எந்தத் துறையிலும், மேகதாது அணை கட்டுவதற்கு அனுமதி வழங்கக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தியும், இன்றைக்கு கர்நாடக

[திரு. ட்டி. இராமச்சந்திரன்] [*2021 ஆகஸ்ட் 27* முதலமைச்சர் மாண்புமிகு திரு. பசவராஜ் பொம்மை அவர்கள் கர்நாடகாவில் காவேரியின் குறுக்கே, மேகதாதுவில் அணை கட்டியே தீருவோம் என்ற ** பேசிக்கொண்டிருக்கிறார். அப்படி கட்டினால், காவேரி டெல்டா, பாலைவனமாக மாறும் அபாயம் இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்ட ரீதியாக எதிர்கொண்டு, மத்திய அரசின் பாரபட்சத்தன்மையைக் கருத்திற்கொண்டு, மேகதாது அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேகதாது அணை பிரச்சினை குறித்து இங்கு பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதில் CPI(M), CPI கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் கர்நாடக மாநிலத்தின் முதல்வரைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கின்றபோது, ** என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இரு மாநில பிரச்சினை இது. எனவே, தயவுகூர்ந்து அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிட வேண்டுமென்று சபாநாயகர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்த வார்த்தைகள் நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்திருக்கின்றது; நீர்மட்டம் குறைந்திருக்கின்றது. மேகதாது அணையைக் கட்டினால் மொத்தமாக ஒரு சொட்டு தண்ணீர்கூட மேட்டூர் அணைக்கு வராமல் போய்விடும். இதில் கண்டிப்பாக தீவிரம் காட்ட வேண்டிய அவசியம் இருக்கின்றதோ என்று தோன்றுகிறது. அதேபோல, ஒன்றிய அரசு உள்நோக்கத்தோடு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2021 ஆகஸ்ட் 27] *[திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]*

செயல்படுகிறதோ என்ற சந்தேகமும் வருகிறது. நாம் ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கின்றோம். இதைத்தாண்டி, தீவிரமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமோ என்ற கோரிக்கையை யோசிக்க வேண்டுமென்றும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். இதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலகட்டப் பேச்சு வார்த்தைகள் நடத்தியும், மேகதாதுவில் அணையினைக் கட்டியே தீருவோம் என்று கர்நாடக அரசு கூறுகிறது. அங்கே அணை கட்டினால், நமது நீர் வாழ்வாதாரத்தில் பாதிப்பு ஏற்படும். ஆகவே, அணை கட்டுவதைத் தடுப்பதற்கு நம்முடைய அரசு எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

***திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநில அரசு, காவேரியின் குறுக்கே மேகேதாட்டில் அணை கட்டியே தீருவோம் என்று பிடிவாதமாக இருந்துகொண்டிருக்கிறது. தமிழக அரசு ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை உரிய நடவடிக்கை எடுத்து வந்தாலும்கூட, அதிலும் குறிப்பாக, சமீபத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், அனைத்துக் கட்சித் தலைவர்களும் சென்று மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்தும் வந்திருக்கின்றோம். மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் நம்மிடம் ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள். ஒப்பதலையும் கொடுத்துவிட்டு, இப்போது சுதந்திர தின விழா உரையாற்றியதிலிருந்து தொடர்ந்து பிடிவாதமாக இருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு, நடுவர் மன்றத்தின் தீர்ப்பு, அதையும் கடந்து நீர்வள ஆதாரச் சட்டத்தையும் மீறி, நம்முடைய கடந்த கால ஒப்பந்தத்தையும் கடந்து, செயல்படக்கூடிய ஒரு நிலை உருவாகியிருக்கிறது.

[திரு. ஜி.கே. மணி] [2021 ஆகஸ்ட் 27

ஆகவே, மேகேதாட்டில் அணை கட்டிவிட்டால் காவேரிக்கு ஒரு சொட்டு தண்ணீர்கூட வராது. தமிழ்நாட்டின் மிக முக்கிய நீராதாரம் காவேரி. 25, 26 மாவட்டங்களுக்கு குடிநீர் ஆதாரம், 15 மாவட்டங்களுக்கு நீர்ப் பாசன ஆதாரம். ஆகவே, இதை கட்டக்கூடாது என்பதில் தமிழ்நாட்டில் இருக்கின்ற ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகள் என்று எல்லோரும் ஒருங்கிணைந்து இருக்கிறோம். ஆகவே, இந்த ஒற்றுமையை மேலும் பலப்படுத்த வேண்டும். நான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருத்துக்கு மாறுபட்ட கருத்தில் இல்லை. தேவைப்பட்டால், தமிழ்நாடு ஒரே குரலில் எழுந்து நிற்கிறது என்பதற்கு ஓர் அடையாள போராட்டத்தைக்கூட அறிவித்தால், தவறில்லை என்பதை பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கருத்தாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட காரணத்தினால், மேகேதாட்டில் எக்காரணம் கொண்டும், எந்தச் சூழ்நிலையிலும் அணை கட்ட அனுமதிக்கக் கூடாது என்று மத்திய அரசை வலியுறுத்துகின்ற அதே வேளையில், தமிழ்நாட்டு மக்களும் ஒன்று திரண்டு நிற்கிறார்கள் என்பதை கர்நாடக அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். நாம் சகோதர நல்லிணக்கத்தோடு வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். ஆகவே, சகோதர நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கக் கூடாது என்பதையும், கர்நாடக அரசு உணர வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தமிழகத்தில் இருக்கின்ற அரசியல் கட்சிகள், அமைப்புகள், தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு நிற்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன். நன்றி.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.

***திரு. எம்.ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக அரசின் மேகதாதுவில் அணை கட்டும் திட்டத்தை தமிழக பாரதிய ஜனதா கட்சி எதிர்க்கும். இதில் தமிழக அரசுக்குத் துணை நிற்கும். மேகதாதுவில் அணை கட்டக் கூடாது என்று தமிழக பாரதிய ஜனதா கட்சி வற்புறுத்துகிறது.

2021 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

***திரு. ம. சிந்தனை செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையிலே, காவேரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டக் கூடாது என்ற பிரச்சினையில் தமிழகமே ஒருங்கிணைந்து நிற்கிறது. மிகவும் நிதானமாக, மிகவும் கவனமாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள், படிப்படியாக இதை நோக்கிச் சாதுர்யமான நகர்வுகளை நகர்த்திக்கொண்டிருக்கிறார். இந்தத் தருணத்தில், தங்கள் மாநிலத்தில் இருக்கின்ற நீராதாரங்களைப் பாதுகாக்க முடியாத நிலையில், வெறும் அரசியல் காரணங்களுக்காக, மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக கர்நாடக மாநிலத்தின் அரசியல்வாதிகள் தொடர்ந்து இதுகுறித்த எதிர்மறையான கருத்துகளை தெரிவித்து வருகிறார்கள். இந்திய அரசியல் சாசனத்திற்கு எதிரான, இந்திய தேசத்தின் ஒற்றுமைக்கு எதிரான இந்தப் போக்கை முறியடிப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களும் உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து துணையாக நிற்போம் என்பதைப் பதிவு செய்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்திலிருந்து வழிந்தோடி தமிழகம், பாண்டிச்சேரி வரையில் செல்கின்ற காவேரி நீர் குறித்து பல்வேறு பிரச்சினைகள், தாவாக்கள் எழுப்பப்பட்டு, காவேரி நடுவர் மன்றம் நிறுவப்பட்டு, 17 ஆண்டுகள் காவேரி நடுவர் மன்றம் பிரச்சினைகளைத் தீர ஆய்ந்து, ஆராய்ந்து, காவேரி நீரைப் பங்கிடுவது குறித்து, 2007-ல் காவேரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டது. இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை மத்திய அரசினுடைய அரசிதழில் வெளியிட வேண்டும், அப்போதுதான் அது அதிகாரமுள்ள தீர்ப்பாக அமையும் என்று கோரிக்கை வைத்தார்கள். ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தப் பிரச்சினை குறித்து சட்டப்*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2021 ஆகஸ்ட் 27

போராட்டம் நடத்தி, உச்ச நீதிமன்றம் வரை சென்று, உச்ச நீதிமன்றத்தின் மூலமாக ஒரு நல்ல தீர்ப்பினைப் பெற்று, காவேரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்புக்கு அரசாணை பெற்றுத் தந்த தலைவராக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் விளங்கினார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்காக தஞ்சை தரணியில் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி அறிவிப்புக் கூட்டம்கூட விவசாயிகள் சார்பாக நடத்தப்பட்டது. அப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் நெகிழ்ச்சியோடு உரையாற்றினார்கள். "என்னுடைய 33 ஆண்டு கால அரசியல் பொது வாழ்க்கையில் நான் ஒரு நாள் மகிழ்ச்சியாக இருந்தேன் என்று சொன்னால், அது காவேரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்புக்கு அரசாணை பெற்றுத் தந்த அந்த நன்னாள்தான்" என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதற்குப் பின்னரும், இந்த இறுதித் தீர்ப்புக்கு, அரசாணைக்கு முழு வடிவம் தர வேண்டுமென்றால், காவேரி நதிநீர் ஆணையத்தையும், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவையும் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். அந்தப் பிரச்சினை குறித்து கலந்தாலோசனை செய்துகொண்டிருந்த காரணத்தினால், இதைப் பெற வேண்டுமென்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய மறைவுக்குப் பின்னர், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைத் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருந்த மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் அந்த வழக்கினைத் துரிதப்படுத்தியதால், காவேரி நதிநீர் ஆணையமும், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவும் அமைக்கப்பட்டன. காவேரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பில் கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களுக்கு வழிந்தோடி வருகின்ற நீரைப் பங்கிடுவது குறித்து முழுமையான இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது.

இந்தச் சூழ்நிலையில், கர்நாடக அரசு மேகதாது என்ற இடத்தில் அணை கட்டுகின்ற முயற்சியில் ஈடுபட்டால், அது தமிழகத்தை மிகப் பெரிய பாதிப்பிற்கு உள்ளாக்கும். தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது தஞ்சை தரணி;

2021 ஆகஸ்ட் 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தஞ்சை தரணியிலுள்ள விவசாயிகள் சேற்றிலே கை வைத்தால்தான் நாம் சோற்றிலே கை வைக்க முடியுமென்ற நிலை தமிழகத்தில் உள்ள சூழ்நிலையில், அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து இதை எதிர்த்தோம். இன்றைக்கும் எதிர்த்துக்கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, இந்தப் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார்கள். அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் முடிவின்படி, அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் டெல்லிக்குச் செல்ல வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அங்கே சென்று நாம் கோரிக்கைகளை வலியுறுத்திக் கூறியிருக்கின்றோம்.

முற்பகல் 10–15

இவ்வளவும் நடந்ததற்குப் பின்னால், சட்டப்பூர்வமாக அங்கீகாரம் கிடைத்ததற்குப் பின்னாலும், கர்நாடக மாநிலம் இன்றைக்கு, அங்கே இருக்கின்ற அமைச்சர்கள் அவர்களாகவே, எதேச்சையாக, இந்திய அரசியல் சாசனத்திற்கு மாறுபட்டு கருத்துகளைச் சொல்கின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுதும், ஆளுகின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், எதிர்க்கட்சியிலிருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும், ஏன் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து பொது மக்களும் இதைக் கடுமையாக எதிர்க்கிறோம். வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தச் சூழ்நிலைதான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி, சட்டபூர்வமாக என்ன முடிவெடுக்கலாம் என்பதைப்பற்றி தீவிரமாக யோசித்து, ஒரு நல்ல முடிவினை எடுக்க வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பேசி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியில் மேகதாது அணை கட்டுவதில் கர்நாடக அரசு எடுக்கிற முயற்சி குறித்து இன்றைக்கு பத்திரிகைகளில் வந்த செய்தியின் அடிப்படையில் மாண்புமிகு

[திரு. துரைமுருகன்] [2021 ஆகஸ்ட் 27

பல்வேறு கட்சித் தலைவர்கள் தங்களுடைய கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் முதலில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இன்றைக்கு கட்சி வித்தியாசமில்லாமல் ஏகோபித்த, ஒரு நிலையிலே நின்று நாம் எப்படி இருக்கிறோமோ, அப்படி இறுதி வரையிலே நாம் இருந்தால் நிச்சயம் இந்தப் பிரச்சினையிலே வெற்றி பெறுவோமென்ற உறுதியை நான் உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கு நீண்ட நாட்களாகவே ஓர் ஆதங்கம். கர்நாடக மாநிலத்தில் ஆட்சி மாறினாலும், கட்சி மாறினாலும், Chief Minister மாறினாலும் அல்லது Irrigation Minister மாறினாலும் கட்சியின் சார்பாக ஒரேமாதிரிதான் பேசுவார்கள். அதிலே வித்தியாசமே இருக்காது. அதேபோல, கேரளத்திலே பார்த்தால் வித்தியாசமே இருக்காது. ஆனால், சில காலங்களிலே தமிழ்நாட்டிலே வித்தியாசங்கள் ஏற்பட்டன. அவையெல்லாம் மறைந்துபோய்விட்டன. இப்போது நம்மிடையே சுமுகமான உணர்வு ஏற்பட்டிருக்கிறது. மற்ற பிரச்சினைகள், அரசியலிலே ஒவ்வொருவருக்கும் ஒரு பிரச்சினை இருக்கும். அதிலே மாறுபட்டிருக்கலாம். ஆனால், இந்தப் பிரச்சினையில் நேற்று அருமை நண்பர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் சொன்னதைப்போல், இருமொழிக் கொள்கையில் இந்தியை எதிர்ப்பதில், காவேரிப் பிரச்சினையில், நாம் ஒன்றுபட்டு இருப்போமானால், எந்த சக்தியும் தமிழகத்தை வீழ்த்த முடியாது என்பது (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய எண்ணம்.

காவேரிப் பிரச்சினை என்பது நீண்ட நெடுங்காலப் பிரச்சினை. அண்ணா அவர்கள் முதலமைச்சரானவுடன் தலைவர் கலைஞர் அவர்கள்தான் பொதுப் பணித் துறை அமைச்சர். அப்போது சில அணைகளைக் கட்ட ஆரம்பித்தார்கள். இந்தமாதிரி நிலைமை இருக்கிறதென்று, அப்போது அண்ணாவிடத்திலே கலைஞர் சொன்னார், அப்போது கர்நாடகாவில் திரு. பட்டேல் என்பவர் முதலமைச்சராக இருந்தார்கள். அண்ணா அவர்கள், நான் அவரிடத்தில் சொல்கிறேன். 'நீ போய் பேசிப் பார்' என்றார்கள். முதன்முதலாக, ஒரு மாநிலத்தினுடைய பொதுப் பணித் துறை portfolio-ஐ வைத்திருக்கிற ஓர் அமைச்சர் மற்றொரு மாநிலத்தினுடைய முதலமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தியது இந்தக் காவேரிப் பிரச்சினைக்குத்தான்.

2021 ஆகஸ்ட் 27] [திரு. துரைமுருகன்]

அதற்குப் பிறகு, கலைஞர் அவர்கள் ஒரு தீர்மானத்தை இந்த மன்றத்திலே கொண்டு வந்தார்கள். போராடி, போராடிப் பார்த்தார்கள். அவருடைய வாழ்நாள் முழுவதையும் அதிலே செலவிட்டார்கள். கடைசியிலே திரு. வி.பி. சிங் என்கிற ஓர் அவதார புருஷர் வந்து நமக்குக் கண் திறந்து வைத்தார். Tribunal ஒன்று அமைப்பதற்கு உத்தரவு கொடுத்தார்கள். அந்த Tribunal-லிலும் நமக்கு நியாயம் கிடைத்ததா என்றால் இல்லை. ஒரு interim order கொடுங்கள், Tribunal-லில் நீதிபதி தீர்ப்பு சொல்வதற்கு பல ஆண்டுகளாகும் என்று, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் மறுபடியும் ஒரு petition போட்டோம். Tribunal, interim order கொடுப்பதற்கு அதிகாரமில்லை என்று சொன்னது. உடனே, கலைஞர் அவர்கள் ஆட்சியில் நாங்கள் Supreme Court-க்குப் போனோம். Supreme Court-ல் interim order கொடுக்கலாமென்று சொன்னார்கள். அந்த order-ஐக் கொண்டு வந்துதான் 205 டி.எம்.சி. தண்ணீரைப் பெற்றோம். அதற்குப் பிறகு வாதாடி, வாதாடி, கடைசியிலே நமக்கு Tribunal-லில் ஒரு நீதி கிடைத்தது. அந்த நீதிக்குப் பிறகு, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் அடுத்தடுத்த மற்ற காரியங்கள் நடைபெற்றன. ஆனால், நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்ப்பு உச்ச நீதிமன்றத்திற்கு இணையான தீர்ப்பு. ஆனால், அதைக்கூட, Supreme Court எடுத்துக் கொண்டு, வாதாடி, அந்தத் தீர்ப்பிலிருந்து மாறுபட்டு, வேறொரு தீர்ப்பைக் கொடுத்து விட்டது. நான் அதனுள்ளே போக விரும்பவில்லை.

முற்பகல் 10–20

ஆனால், இப்போதிருக்கிற பிரச்சினை, மேகதாது அணை கட்டுவதை நிறுத்த வேண்டுமென்று நாம் கேட்கிறோம். இதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்திக்கச் சென்றபோது என்னையும் அழைத்துக் கொண்டு போனார்கள். அந்த இடத்திலே அவர்கள் தனியாக சுமார் 10 நிமிடங்கள் மேகதாதுவைப் பற்றிப் பேசியிருப்பார்கள். அப்போது உடனே பாரதப் பிரதமர் அவர்கள் சொன்னார்கள், 'Here is your Irrigation Minister. I will call the Jal Shakti Minister. Go and meet him' என்று சொன்னார். உடனே அவரைப் பார்க்க முயற்சித்தபோது, 'அவர் ஊரில் இல்லை, மறு நாள் பாருங்கள்' என்று சொன்னார்கள். மாண்புமிகு பிரதம

[திரு. துரைமுருகன்] [2021 ஆகஸ்ட் 27

மந்திரி அவர்கள் அன்று காட்டிய அக்கறைக்கு நான் இப்போதும் நன்றி தெரிவிக்கின்றேன். அதற்குப் பிறகு கர்நாடக முதல்வருக்கு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதினார்கள். அவர்கள் ஒரு தீர்மானம் போட்டார்கள். பிறகு நானே சென்று அந்த Jal Shakti Minister-ஐ பார்த்துவிட்டு வந்தேன். பிறகு ஒரு தூதுக்குழு, நம் எல்லோருடைய கருத்துகளையும் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகத்தான் நாம் ஒரு சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அதிலே ஒரு முடிவு செய்து, ஒரு தீர்மானத்தோடு நாம் சென்றோம். அங்கே இருக்கிற ஜல்சக்தி அமைச்சரோடு நீங்களும் விவாதித்தீர்கள். அப்பொழுது அவர் என்ன சொன்னார்? "அவர்கள் DPR கொடுத்தது சரியில்லை என்று நாங்கள் சொல்லிவிட்டோம். தமிழ்நாட்டினுடைய, பாண்டிச்சேரியினுடைய, கேரளாவினுடைய ஒப்புதலோடு வந்தால்தான், நாங்கள் DPR-ஐ ஏற்றுக்கொள்வோம்; இல்லாவிட்டால் நாங்கள் DPR-ஐ ஏற்றுக்கொள்ளமாட்டோம். DPR-ஐ ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர்கள் காவேரியில் மேகதாது அணை கட்ட முடியாது" என்றுதான் அவர்கள் கடைசியாகச் சொன்னார்கள்.

அதுகூட பரவாயில்லை. அதற்குப்பிறகு, சென்ற வாரம்கூட ஒரு செய்தி அனுப்பியிருந்தார். அடுத்த மாதம் முதல் வாரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே வருவதாகச் சொல்லி அனுப்பினார்கள். ஆனால், அடுத்த வாரம் திங்கள்கிழமை, செவ்வாய்க்கிழமையில் டெல்லியில் Cauvery Water Management Authority கூடப் போகிறது. அந்த Authority Meeting-ல் இந்த subject விவாதிக்கப்படும் என்ற செய்தி இப்போது வந்திருப்பதுதான் அதிர்ச்சியைத் தரக்கூடியது. Cauvery Water Management Authority has no jurisdiction at all to discuss this matter. இதைப்பற்றி பேசுவதற்கு அதற்கு எந்தவிதமான முகாந்திரமும் கிடையாது. காரணம், மேகதாது அணை குறித்து நாம் உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்திருக்கிறோம். DPR வாங்கினார்கள் என்பதைக்கூடக் கேள்விப்பட்டு, நாம் Central Water Commission-ல் ஒரு contempt petition போட்டிருக்கிறோம். இவையெல்லாம் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறபோது, Cauvery Water Management Authority-யிடம் "மேகதாதுவைப் பற்றி பேசுவது என்பது sub-judice. ஆகையினால், எந்தக் காரணத்தைக் கொண்டும் பேச முடியாது; பேசக் கூடாது" என்பதுதான் தமிழ்நாட்டினுடைய திட்டவட்டமான கொள்கை. இதைத் தெரிவிக்கத்தான் நீர்வளத் துறைச் செயலாளர் அவர்களே

2021 ஆகஸ்ட் 27] [திரு. துரைமுருகன்]

அந்த Authority-யிடம் செல்கிறார்கள். அவர்களிடத்திலே தமிழ்நாட்டினுடைய முடிவை நாங்கள் தெரிவித்திருக்கிறோம். We reiterate the stand of Tamil Nadu. காரணம் Cauvery Water Management Authority has no jurisdiction to discuss this matter. It is sub-judice என்பதை மிகத் தெளிவாக நாம் அதில் சொல்கிறோம்.

ஆனால், மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு. பொம்மை அவர்கள், இதே பெயர் கொண்ட அவருடைய தந்தையார், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், அவருக்கு மகனாக இவர், அவருடைய பெயரை வைத்திருக்கிறார். முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு திரு. பொம்மை அவர்கள், தலைவர் அவர்களிடத்திலே மிக நெருக்கமாக இருந்தவர்; அணுகும் முறையில் இருந்தவர். அதுமட்டுமல்லாமல், மத்திய அரசாங்கம், எந்த மாநில அரசாங்கத்தையும் நினைத்த நேரத்திலே கலைக்கலாம் என்ற எண்ணத்திற்கு, ஒரு வழக்குத் தொடுத்து முற்றுப்புள்ளி வைத்தவர் திரு. பொம்மை அவர்கள். எனவே, அப்படிப்பட்டவருக்கு மகனாகப் பிறந்தவர், நீதி தவறமாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஒருக்கால், அரசியல் சூழ்நிலை காரணமாகக்கூட அவர் பேசியிருக்கலாம். எது எப்படியிருந்தாலும் தமிழ்நாட்டினுடைய கொள்கையான திட்டவட்டமாக மறுக்க வேண்டிய இடத்தில் மறுப்போம்; (மேசையைத் தட்டும் ஒலி) வாதாட வேண்டிய இடத்தில் வாதாடுவோம்; வெற்றிபெறுவோம். நன்றி, வணக்கம்.

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் பழுதடைந்த வீடுகளைக் கட்டித் தருதல், அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், கல்விக் கட்டண சலுகை வழங்குதல், பணக்கொடை உயர்த்தி வழங்குதல் உள்ளிட்ட பொதுத் துறை தொடர்பான மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி *110*-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது என்றால்,